JESUS GOOD SHEPHERD MINISTRIES
CHENNAI - 82

# இயேசுவே நல்ல மேய்ப்பன் ஊழியம்

## நம்பிக்கையின் வார்த்தை
## *Word of Hope*

## ஏப்ரல் 2017

இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக; கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.
– சங்கீதம் 130:7



ஆசிரியர்
R. கிங் டேவிட்



தங்கள் சொந்த பாவங்களினிமித்தம் பெரும் துன்பத்தையும், வேதனையையும் அறுப்பவர்கள் தேவன் அவர்களை மன்னித்து குணமாக்கி அவரோடுள்ள ஐக்கியத்துக்கு மீண்டும் கொண்டு வருவார் என்ற நிச்சயத்துடன் தேவனை நோக்கி கூப்பிடவேண்டும். துன்பத்திலிருக்கிறவர்கள் அவருடைய அன்பு, கரிசனை மற்றும் தயவையும் அறியும்படிக்கு. அவர்களுக்கு இரக்கத்தைக் காண்பிக்கவும், பாவத்தின் அடிமைத்தனத்தினின்று இரட்சிக்கவும் தேவன் விரும்புகிறார்.

**உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு. – சங்கீதம் 130:4**

# பயப்படாதிருங்கள்



அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்.
– மத்தேயு 28:10

*இந்த பெண்கள் ஏன் பயப்படாமலிருக்க வேண்டும்?*
*தேவதூதனின் பதில் நமக்கு இதற்குரிய விடையைத்தருகிறது.*

"இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன்."
– மத்தேயு 28:5



இந்த உலகம் இயேசுவை வெறுத்துச் சிலுவையில் அறைந்த போதும், இந்தப் பெண்கள் இயேசுவிடம் அன்பும், பாசமும் உள்ள உண்மையான நண்பர்களாக இருந்தவர்கள். கிறிஸ்துவின் வருகையின்போது அவருடைய விசுவாசிகள் பயப்படத்தேவையில்லை. காரணம்: இந்த உலகம் அவரைப் புறக்கணித்து, அவருடைய பரிசுத்த வார்த்தைகளையும் ஏற்றுக் கொள்ளாமல் தள்ளிவிட்ட நேரத்திலும் உலக வாழ்க்கையில் விசுவாசிகள் இயேசுவிடம் உண்மையான விசுவாசமும், அன்பும் உள்ளவர்களாக அவரோடு நிலைத்திருந்தார்கள். இந்த உண்மையை யோவான், 1 யோவா 2:28 ஆம் வசனத்தில் இவ்வாறு கூறுகிறான்.

## "நான் உங்களுடனே கூட இருக்கிறேன்."

இழந்துபோனவர்களைத் தேடும்பணியில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும், கிறிஸ்துவின் நீதியான வழிகளைப் பின்பற்றும்படிப் போதிக்கிறவர்களுக்கும் இயேசு கூறும் நம்பிக்கையூட்டும் உறுதிமொழி இதுவாகும்.

இயேசு உயிர்த்தெழுந்தார். இன்றும் உயிரோடிருக்கிறார். தம்முடைய ஒவ்வொரு பிள்ளையிடமும் அவருக்கு தனிப்பட்ட கரிசனை உண்டு. அவர் ஆள்தத்துவமான பரிசுத்தாவியாக உங்களில் வாசமாயிருக்கிறார்.

## அவருடைய வார்த்தைகளின் மூலமும் அவர் உங்களுடன் பேசுகிறார் [யோவா 14:23].

உன் நிலை எதுவாயிருந்தாலும் சரி பலவீனமானவனா, ஏழையா, தாழ்த்தப்பட்டவனா, சமுதாயத்தில் முக்கியமில்லாத

மனிதனா யாராயிருந்தாலும் அவர் உனக்காகக் கவலைப்படுகிறார். அவர் உன் வாழ்க்கையின் போராட்டங்கள், சோதனைகளைக் கரிசனையோடு கவனித்து தமது கிருபையைப் போதுமான அளவிற்கு உனக்கு அளிக்கிறார்.

இந்த மாதத்தின் உன் காரியங்களிலெல்லாம் உங்களுக்கு கிருபையும் திரளான மீட்பும் உண்டாக பிராத்திக்கின்றோம்.



# இயேசு உயிர்த்தெழுந்த நாள் வாழ்த்துக்கள்.

**உங்கள் யாவருக்கும் இயேசுவே நல்ல மேய்ப்பன் ஊழியத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.**

**கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. ஆமென்.**